

சென்னிமலை வெண்பாமாலை

கவிஞர் ச.கந்தசாமி

சென்னிமலை வெண்பாமாலை

ச.கந்தசாமி

திருக்குறள் பேரவை, சென்னிமலை

ஆண்டு : முதற்பதிப்பு - 2026

நூல் பெயர்: சென்னிமலை வெண்பாமாலை

நூல் அளவு : 1 x 8 (மெப்லித்தோ பேப்பர்)

ஆசிரியர் : ச.கந்தசாமி

வெளியீடு : திருக்குறள் பேரவை
சென்னிமலை
97889 04755

அச்சிட்டோர் : குறள் அச்சகம்,
ஈரோடு
8760382929

விலை : ரூ. 25.00

“செம்மொழிச் செம்மல்”
புலவர். பெ.திருவள்ளுவர், எம்.ஏ., எம்.எட். எம்.ஃபில்.,
தலைவர், திருக்குறள் பேரவை.
சென்னிமலை.

35, பிராட்டி அம்மன் கோவில் தெரு,
சென்னிமலை 638 051.

அணிந்துரை

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் – குறள் 399

கொஞ்சு தமிழ் பேசும் கொங்கு மண்டலத்தில் மஞ்சு தவழ் மாமலைசூழ் சென்னிமலைத் திருத்தலத்தில், குன்றுதோறாடும் குமரனாக வீற்றிருக்கும் சிரகிரி வேலவன் சீரருளால் “சென்னிமலை வெண்பாமாலை” என்னுமொரு 40 வெண்காக்களின் தொகுப்பு நூலை அளித்திட்ட பெருமகனார், ஈரோடு மாவட்ட ஆட்சியர் கவிஞர். ச.கந்தசாமி, இ.ஆ.ப. அவர்களை அகங்குளிர வாழ்த்தி மகிழ்கிறேன்.

தமிழ் இலக்கணத்தின் ஐந்து வகைகளில் யாப்பிலக்கணம் ஒன்றாகும். யாப்பருங்கலக் காரிகை என்பது விரிவான நூலின் பெயராகும். இது செய்யுள் இயற்றுவதற்கான அடிப்படை இலக்கண நூல். “காரிகை கற்றுக் கவிபாடு” என்பர் மேலோர். அத்தகு இலக்கணம் முழுவதும் கற்றுணர்ந்து பாப்புனையும் பாவலர், ஆற்றலர் இவர் நால்வகைப் பாக்களில் வெண்பா என்னும் நான்கு அடிகளால் ஆன, இவரது நாற்பது பாடல்களும் படிப்பவர்க்கு மிக எளிமையான, செப்பலோசையுடன் படைக்கப்பட்டதாகும்.

சென்னிமலை முருகன் மீது கொண்டுள்ள காதல், கற்பனை வளம், கவித்திறன், தாய்மொழிப்பற்று, பக்தி நெறி, கருத்துச் செறிவு இவையாவும் காட்டுகின்ற அற்புத நூலாக அமைந்துள்ளது மிகவும் போற்றுதற்குரியதாகும்.

அண்மையில் உலகத் தாய்மொழி நாளில் (21.02.2026) தமிழமிழ்து அறக்கட்டளை "தமிழ்மறைக் காவலர்" என்ற விருதளித்துப் பெருமை செய்தது திருக்குறளுக்கு இவர் ஆற்றிவரும் அருந்தொண்டுகளின் பேரடையாளமாகும். பள்ளிப் பருவத்தில் இவரது தமிழாசிரியர் இவருக்குத் திருக்குறளைக் கற்பித்த முறையே, இவர் நூல் முழுவதும் படித்துப் பயன்பெறத் தூண்டு கோலாகியது என்பது பேருண்மை.

தனது நூலில் "கந்தனருள் சொல்லும் கவசத் தமிழ்பாடல் தந்த மலை" என்ற அடிகள் வழி கந்த சஷ்டி கவசம் அரங்கேறிய திருத்தலம் என்பதைக் காட்டுகிறது. "காவடியாம் காவடி கந்தனவன் காவடி" என்ற தொடர் சொல்லோட்டம், காவடி ஆடுவது போன்ற உணர்வை உண்டாக்குகிறது. வானம் தருகின்ற மாமழைபோல் சென்னிமலை வேலன் தருகின்றான் தன்னருளை என்பது உவமைஅணிக்கு உதாரணமாய் அமைந்துள்ளது. கலையாலே உன்னருளைக் காட்டத்தான் கல்லில் சிலையாக நின்றாயோ? என்ற அடிகள் கவிஞரின் கற்பனை வளத்தைக் காட்டுகிறது. நிறைவாகக் கவிஞர் அவர்கள், பார்புகழும் பொங்குதமிழ்ச் சொல்லால் புகழ்ந்து என்பதன் வழி, தமிழுக்குப் புதிய அடைமொழியாக பொங்குதமிழ் எனச் சொல்லி சங்கத் தமிழின் உயர்சிறப்பை மேலும் உயர்த்தியுள்ளார்.

மாவட்ட ஆட்சியராக இருந்து ஆட்சிப் பணியை மிகத்திறன்படச் செய்வதுடன் சமுதாயப்பணி, சமூகத் தொண்டு ஆன்மிகச்சேவை, இலக்கியப் படைப்பாளர், பேச்சாளர் என்ற பன்முக வியத்தகு வித்தகராக விளங்கி வரும் நமது ஈரோடு மாவட்ட ஆட்சியர் கவிஞர் ச.கந்தசாமி, இ.ஆ.ப., நமக்கு கிடைத்தது நற்பேறு மட்டுமல்ல, பெறுதற்கரிய பெரும்பேறு எனக் கூறுவதே சாலப் பொருத்தமாகும்.

படிப்பாளியாகவும், படைப்பாளியாகவும் உள்ள பண்பாளர் மேலும் உயர்நிலை எய்திப் பெரும்புகழ் அடைய, எல்லாம் வல்ல எம்பெருமான் சிரகிரி வேலவனின் சீரடி பணி வோமாக.

“தமிழுக்குச் செய்வோம் நாளும் நற்றொண்டு” என்பதை மனதில் பதித்து கவிஞர் ஐயா அவர்களின் நூல்களை வாங்கிப்படித்து முடிப்போம் படிக்கச் செய்வோம், அதுவே தமிழுக்குச் செய்யும் அருந்தொண்டாகும்.

தமிழெனச் சிறந்து குறளாய் உயர்ந்து வாழிய! வாழியவே!

நன்றி.

பெ.திருவள்ளுவர்

த.பிச்சாண்டி இ.ஆ.ப.(ப.நி.)
அப்பாசாமி கப்பெலா அடுக்ககம்,
29/10, ஆற்காடுசாலை, சாலிகிராமம்,
சென்னை 600093.

மதிப்புரை

வணக்கம்.

நண்பர் ச.கந்தசாமி இ.ஆ.ப. அவர்கள் அருள்மிகு சென்னிமலை முருகன் மீது இனிய வெண்பாக்களை இயற்றி, அதைத் தொகுத்து ஒரு நூலாக அளித்துள்ளமை மிகவும் மகிழ்ச்சி நிறைந்த, பாராட்டுக்குரிய ஒரு சாதனை ஆகும்.

நண்பர் கந்தசாமி அவர்கள் இயல்பாகவே தமிழ்மொழியில் மிகுந்த ஆர்வமும், புலமையும் உடையவர். ஏற்கெனவே அவர் தமிழில் இனிய பல கவிதைகளைப் படைத்துள்ளதை நான் அறிவேன்.

அந்த வகையில் அவர் இயற்றியுள்ள மிக நேர்த்தியான வெண்பாக்களை நான் அண்மைக்காலமாகப் படித்து இன்புற்றிருக்கிறேன்.

“புலவோர்க்கு வெண்பாபுலி” என்பது பழமொழி. தமிழ் யாப்பிலக்கண அடிப்படையில் வெண்பா இயற்றுவது என்பது மிகவும் கடினமான ஒன்றாகும்; தளை, சீர், அடி, எதுகை, மோனை ஆகியவை மிகவும் கவனமுடன் கையாளப்பட வேண்டும். இவற்றுடன் அரியபொருளும், நயமும்

சேர்ந்துவிட்டால் அத்தகைய வெண்பா, சர்க்கரைப் பந்தலில் தேன் மாரிபெய்தது போல ஆகிவிடும். 'நளவெண்பா', 'கந்தர்கலிவெண்பா', 'மூதுரை', 'நல்வழி', 'நீதிவெண்பா' போன்ற நூல்களைப் படிப்போர்க்கு இந்த உண்மை புலனாகும்.

நண்பர் கந்தசாமி அவர்கள் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்றவுடன் சென்னிமலை ஆண்டவர் திருக்கோயிலுக்கு சென்று பக்தியுடன் தரிசித்தபோது, சென்னிமலை முருகன் இவரை ஆட்கொண்டு தன்மீது வெண்பாமாலையை இயற்றி, அதனைத் தனக்குச் சூட்டவேண்டும் என்றுசித்தம் கொண்டு, அருள்பாலித்தார் போலும்! எனவே, தனது அரசுப்பணிக்கு இடையூறு இல்லாதவகையில், ஒரு சில நாட்களிலேயே 40 அழகிய வெண்பாக்களைத் தங்குதடை இன்றி சென்னிமலை முருகன் மீது இயற்றி அதை நூலாக வெளிக்கொணர்ந்துள்ளார்.

இந்த வெண்பாக்களைப் படிக்கும் பொழுது நண்பர் கந்தசாமியின் தமிழ்ப்புலமையும், சென்னிமலை முருகன் மீது அவர் கொண்டுள்ள அளவற்ற பக்தியும் நமக்கு தெளிவாகத் தெரிகின்றது.

இந்தநூலில்உள்ள40பாடல்களையும்முருகப்பெருமான்மீதானசரணாகதித்தத்துவத்தை முன்னிலைப் படுத்தி நூலாசிரியர் எழுதியுள்ளார். குறிப்பாக "கலைமேவும்", "காற்றாகதீயாக", "ஓமென்றசொல்லில்", "அடிவழிசென்றால்", "சென்னிமலைவேலா", "தென்றல்குடியிருக்கும்", "மூலப்பரம்பொருளை", "சூழும் வினையெல்லாம்", "உனையொன்றுகேட்டேன்", "சொல்லொன்று",

“சென்னிமலை செல்வகுமரா”, “கூர்ந்தமதிவேண்டி”, “உரமாவேன்”, என்று தொடங்கும் பாடல்கள் அனைத்தும் இந்தக்கருத்துக்கு அழகிய எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்றன.

நூலில் உள்ள பாடல்கள் அனைத்தும் முக்கனியின் சாற்றைப்பிழிந்து வழங்கியது போல, எதுகை, மோனை, பொருள்நயம் இவற்றை உள்ளடக்கி, படிப்போர்க்கும், மனமுருகிப்பாடுவோர்க்கும் அமுதாகஇருக்கின்றன. தேவராயசுவாமிகள் கந்தர் சஷ்டியை எழுதி சென்னிமலை முருகனுக்கு சமர்ப்பித்தார் என்றால், நமது நூலாசிரியர் கந்தசாமி அவர்கள் 40 வெண்பாக்களை மலர்களாக எடுத்து தொடுத்து மாலையாக சென்னிமலை முருகனுக்கு சூட்டி உள்ளார். அருள்மிகு கந்தசாமியினுடைய திருவருள் நூலாசிரியர் கந்தசாமிக்குப் பரிபூரணமாகக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தநூலை ஆன்மீக நண்பர்கள் அனைவரும் படித்து, சென்னிமலை ஆண்டவரின் அருளைப்பெற்று, இன்புற்று உய்யவேண்டும். திரு. கந்தசாமி அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். தனது மற்ற படைப்புகளையும் அவர் நூல்களாக விரைவில் வெளியிட வேண்டும் என்பது எனது அவா.

அன்புடன்,

(து.பிச்சாண்டி)

சென்னிமலை வெண்பாமாலை

கலைமேவும் கொங்குநன் நாட்டிலுயர் சென்னி
மலைமேல் விளையாடும் மைந்தா - அலைமேல்
குடியிருக்கும் மால்மருகா; காலமெலாம் உந்தன்
அடியிருக்க வேண்டும் அருள். 1

சென்னிமலை மேலே சிவன்மைந்தன் வீற்றிருக்கும்
சன்னிதியைச் சேர்ந்தால்நம் சங்கடங்கள் தீர்த்திடுவான்;
இன்னிசையால் பாட யிடரெல்லாம் போக்கிடுவான்;
வன்னியனை வாயார வாழ்த்து. 2

காற்றாக தீயாக கல்லாக விண்ணாக
ஊற்றாக நின்றவன் யாரென்றால் - ஆற்றாது
வந்தவினை தீர்த்துநமை வாழ்விக்கும் சென்னிமலை
சுந்தரனை செந்தமிழால் சொல். 3

ஓமென்ற சொல்லில் ஒளிந்திருக்கும் கள்வனவன்
ஆமென்று கண்பார்த்தால் அங்கிருப்பான் - யாமென்று
நின்றால் செருக்கறுப்பான்; சென்னிமலை நீயெனைக்கா
யென்றால் தருவான் அடி. 4

அடிவழி சென்றால் அருள்தரும்; எண்ணிப்
படிவழி சென்றால் பதந்தரும்; மக்கள்
கொடிவழி காத்துவரும் சென்னி மலையை
படிவழி காட்டும் பரிந்து. 5

குன்றுதோ றாடும் குமரனைக் காணத்தான்
நின்றுதே ரோடும் நகரமாம் சென்னிமலை
தேடிவரும் பக்தருக்குத் தீங்கில்லை இல்லையென
பாடிவரும் செந்தமிழ்ப் பாட்டு. 6

கந்தனருள் சொல்லும் கவசத் தமிழ்ப்பாடல்
தந்தமலை; வேழத்தான் தம்பியவன் - சொந்தமலை
எந்தமலை? வேண்டிவந்த ஏழையர்க் கேற்றமெலாம்
தந்தமலை சென்னிமலை தான். 7

பண்ணிய பாவமெலாம் பஞ்சாகப் போய்விடட்டும்;
புண்ணிய காரியங்கள் பொங்கிப் பெருகட்டும்;
எண்ணிய தெல்லாம் இடரின்றி ஈடேற
சென்னிமலை வேலனைச் சேர். 8

மண்ணுக் குரியானை; மாயோன் மருமானை;
கண்ணுக் கழகானை; வேழமுகன் - விண்ணுள்
முதலானை வென்றானை; சென்னிமலை யானை
முதலாகக் கொள்வோம் முனைந்து. 9

சென்னிமலை வேலா சிவகுரு நாதாயென்
முன்னிருக்கும் தீவினைகள் மாய்ப்பதற்கு - என்னிருகை
மட்டுமே போதாதுன் பன்னிரு கையாலும்
தொட்டவற்றைத் தூரத் துரத்து. 10

சென்னிமலை யானை சேவற் கொடியானை
கன்னிதெய் வானை கலந்தானை - பன்னிரு
கையானைப் பாதம் கொடுப்பானை பொன்னொளிரும்
மெய்யானைச் சேர்ந்திடுவோம் மொய்த்து. 11

காவடியாம் காவடி கந்தனவன் காவடி;
பூவடிக்கும் தேனுண்ட வண்டுபோல் - பாவடித்தே
ஆடுகிறேன் சென்னிமலை ஆண்டவா; காலமெலாம்
தேடுகிறேன் உன்னருளைத் தா. 12

சேனைத் தலைவனை சென்னி மலையானை
யானை முகத்தானின் அன்பைப்பெற் றானை
அகத்தில் நிறைப்பவர்க்கே அன்பருளும் சேயோன்
முகத்தில் கொடுப்பான் மகிழ்வு. 13

கான மயிலேறிக் கந்தன் வருகின்றான்;
ஞான வொளியாய்த் திகழ்கின்றான் - வானம்
தருகின்ற மாமழைபோல் சென்னிமலை வேலன்
தருகின்றான் தன்னருளைத் தான். 14

தென்றல் குடியிருக்கும் சென்னிமலை என்னுமொரு
குன்றில் குடியிருக்கும் கோமானே - அன்றில்
பறவைபோல் உன்னில் பிணைந்திருக்க வேண்டும்;
பிறவிப் பெருந்துயரைப் போக்கு. 15

அந்தமாய் ஆதியாய் ஞாலத்தை ஆள்பவனை
சொந்தமென மக்களெலாம் சூழ்பவனை -செந்தமிழால்
கூறிவா நாளும்; குமரனருள் தருவான்
ஏறிவா சென்னிமலை யே. 16

ஆனந்தமாய் மயில்கள் ஆடுவ தெந்தமலை;
கோனந்த கந்தனருள் கூடுமலை யெந்தமலை;
சீரோடும் நல்ல சிறப்போடும் வாழ்வளிக்கும்
தேரோடும் சென்னிமலை தான். 17

மூலப்பரம் பொருளை முத்தருணர் பொருளை;
சீலம்தரும் பொருளை; சென்னிமலை யாளும்
தனிப்பொருளை; தூயவர்தம் தவத்தால் தேடும்
கனிப்பொருளைக் காண்பதுவே கண். 18

வினையோட வேண்டும் விதிமாற வேண்டும்;
எனையாளும் சென்னிமலை யானே; உனைப்பாட
வேண்டும் உளமாற நானும்; உனதருளே
வேண்டும் விரைந்தருகே வா. 19

நன்றும் அதனெதிர் தீது மறியாமல்
நின்றும் நடந்தும் நிலைபெறாமல் - என்றும்
அலையாடும் உள்ளத் தருநோய்க்குச் சென்னி
மலையானின் தாளே மருந்து. 20

நானென்ன செய்வதிங்கு நாளும் பொழுதுமென்
கோனென்ன சொன்னாலும் செய்வதன்றி - தேனென்ன
செந்தமிழால் என்னநான் செய்வதென் றெந்தனுக்கு
சென்னிமலை யானே சொல். 21

சூழும்வினை யெல்லாம் சென்னிமலை போக்கிவிடும்;
வாழும் வழியெனக்குத் தந்துதமிழ் - ஆளும்
படிகென்னை ஆளாக்கிப் பாடவைக்கும்; கந்தன்
அடிக்கென்னைச் சேர்க்கும் அணைத்து. 22

வேலவா; வேண்டும்வரம் தருவாய்; சக்தியுமை
பாலகா பாதம் பணிகின்றேன், - மூலவா
என்னிதயம் ஆளவா; என்றுமெனைக் காப்பாயே
சென்னிமலைச் சேயே சரண். 23

உனையொன்று கேட்டேன் உலகாளும் வேந்தே;
எனையென் றுனைத்தந்து மீட்பாய் - வினையொன்றும்
செய்யாமல் சென்னிமலை பேர்சொல்லிப் பாடென்றாய்
உய்யாமல் நின்றேன் உயர்ந்து. 24

அன்பருளத் துள்ளே அழுக்கெல்லாம் நீக்குதற்கே
அன்பருளத் துள்ளே அமர்ந்திருப்பான் - அன்பருளும்
சென்னிமலை யாண்டவன்; செந்தமிழில் அன்பருளால்
இன்னிசைப் பாட இசைந்து. 25

சென்னிமலை வேலவா; சங்கரனோ மென்பதை
உன்னிடம் கற்றனன் அல்லவா? - என்னிடம்
நீயதைச் சொன்னாலே நீங்கிடும் அல்லவா
தீயவை எல்லாம் தொலைந்து. 26

பொன்னிலும் நின்று புழுதியிலும் நின்றருளும்
சென்னிமலை வேலா; சிவக்குமரா - என்னிலும்
நின்று வழங்கு நிறைஞானம்; உன்னருளால்
வென்றிடச்செய் மேலாம் உலகு. 27

சொல்லொன்று சொல்லெனக்குச் சென்னிமலை வேலாவுன்
சொல்லென்னைச் சேர்ந்தாலென் சோர்வெலாம் நீங்கிடுமே;
கல்லொன்றாய் நிற்பார் கனிந்திடுவார்; உன்சொல்லால்
புல்லொன்றும் பூவாகிப் போம். 28

குறவள்ளி நாயகனே; குன்றுடைய வேலா;
உறவென்றே உன்னடி சேர்ந்தேன் - அறவாழி
யாய்நின் றகிலமெலாம் காப்பவனே; சென்னிமலை
யாய்நின் றெனக்கும் அருள். 29

அருட்கடலே; சென்னிமலை யானே; எனக்கேன்
பொருட்குவை எல்லாம் ; பதம்நான் - உருப்படவே
தந்தெனை ஆட்கொள்ளே; தீந்தமிழ்ப் பாட்டாலே
வந்தனை செய்கின்றேன் வா. 30

கலையாலே உன்னருளைக் காட்டத்தான் கல்லில்
சிலையாக நின்றாயோ சென்னி - மலையானே;
கல்லோ யினிக்கின்ற கற்கண்டோ; செந்தமிழ்ச்
சொல்லோ வியமுன் சிரிப்பு. 31

வேண்டும் வரம்தருவான் வேண்டுக என்றார்கள்;
வேண்டுதற் கொன்றுமில்லேன் வேலவனே - யாண்டுமுன்
இன்னருளே நின்றருளல் காண்கின்றேன்; சென்னிமலை
மன்னவனே மாறாதென் மாண்பு. 32

சென்னிமலை செல்வக் குமராவுன் செந்தமிழை
சென்னியில் வைத்திட்டேன் செல்வமாய்; - இன்னிசையால்
எப்போதும் பாடிடவே ஏங்குகின்றேன்; உன்னடியில்
முப்போதும் நிற்பேன் முனைந்து. 33

அமரனை மாறா அழகனை செந்தில்
குமரனை நெஞ்சில் குருவாய் தினம்நினை;
சென்னி மலையுனை சூழும் வினையினை
முன்னிருந்து நீக்கும் மகிழ்ந்து. 34

கூர்த்தமதி வேண்டி குருவருளும் வேண்டிநிதம்
சேர்ந்திடுவார் மக்களெல்லாம் சென்னிமலை - ஆர்ந்தபுகழ்
கொண்டிலங்கும் வேலனடி காண்பதற்கே தேன்விரும்பும்
வண்டினைப்போல் செல்வார் விரைந்து. 35

நாடுவோம் சென்னிமலை நாயகனை; சேர்ந்தொன்றாய்
ஆடுவோம் சுற்றிநின்றே அன்பாலே - பாடுவோம்
கொங்குதமிழ் நாயகனை; காவலனை; பார்புகழும்
பொங்குதமிழ்ச் சொல்லால் புகழ்ந்து. 36

ஒன்றா யிருந்தாய் உலக முதல்வனே;
நன்றாய் தமிழ்தந்தாய் நான்பாட;- வென்றாய்
சிரம்தாழ்ந்தார் நெஞ்சத்தை; சென்னிமலை யானே
கரம்குவித்தேன் என்னையும் கா. 37

உரமாவேன் உன்னடியில்; உன்கொடி தாங்கும்
மரமாவேன் நானும் மகிழ்ந்து; - சுரமாவேன்
செந்தமிழ்ப் பாட்டுக்கு; சென்னிமலை யேயெனக்கும்
அந்தமிலா ஞானம் அருள் 38

பூமாலை சூடிப் புனிதனைப் போற்றுவேன்;
பாமாலை சூடிப் பணிந்திடுவேன் சென்னிமலை
யானை அருந்தமிழால்; பூவாய் மலர்ந்திடுவேன்
சேனைத் தலைவனைச் சேர்ந்து. 39

சோதிப் பிழம்பாக சென்னிமலை யாளும்
ஆதி முதலான ஆண்டவனை - ஓதி
யொருநாளும் யாரும் உணர்ந்திட வொண்ணா
பெருமானைப் பாடு புகழ்ந்து. 40

ஆசிரியர் குறிப்பு :

- ச.கந்தசாமி, விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையை பூர்வீகமாகக் கொண்டவர், திருநெல்வேலியில் பிறந்து வளர்ந்தவர்.
- தந்தை சங்கரசுப்பு, தாயார் மல்லிகா.
- தமிழ் இலக்கியத்திலும், பொது நிர்வாகத்திலும் முதுகலைப் பட்டம் பெற்றவர்.
- தமிழ்நாடு மாநில குடிமைப் பணி அலுவலராக பணியாற்றியவர். 2024ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்று இந்திய ஆட்சிப்பணி (I.A.S) அலுவலராக பணியாற்றிவருகிறார்.

ஆசிரியரின் பிற நூல்கள்

1. சென்பா நாற்பது – கீதம் பதிப்பகம்
2. மகளாற்றுப்படை – சுடர்விழி பதிப்பகம்
3. அகநக (வெண்பா விருந்து) – கோரல் பதிப்பகம்

கலையாலே உன்னருளைக் காட்டத்தான் கல்லில் சிலையாக நின்றாயோ? என்ற அடிகள் கவிஞரின் கற்பனை வளத்தைக் காட்டுகிறது. நிறைவாகக் கவிஞர் அவர்கள், பார்புகழும் பொங்குதமிழ்ச் சொல்லால் புகழ்ந்து என்பதன் வழி, தமிழுக்குப் புதிய அடைமொழியாக பொங்குதமிழ் எனச் சொல்லி சங்கத் தமிழின் உயர்சிறப்பை மேலும் உயர்த்தியுள்ளார்.

பெ.திருவள்ளுவர்

"புலவோர்க்கு வெண்பாபுலி" என்பது பழமொழி. தமிழ் யாப்பிலக்கண அடிப்படையில் வெண்பா இயற்றுவது என்பது மிகவும் கடினமான ஒன்றாகும்;

நூலில் உள்ள பாடல்கள் அனைத்தும் முக்கனியின் சாற்றைப்பிழிந்து வழங்கியது போல, எதுகை, மோனை, பொருள்நயம் இவற்றை உள்ளடக்கி, படிப்போர்க்கும், மனமுருகிப்பாடுவோர்க்கும் அமுதாகஇருக்கின்றன.

த.பிச்சாண்டி இ.ஆ.ப.(ப.நி.)